هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

1

## இப்ராஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் எறியப்பட்டபோது கூறிய வார்த்தைகள்

حَسْبِيَ اللّٰهُ وَنِعْمَ الْوَكِيلُ

ஹஸ்பியல்லாஹு வ நிஃமல் வகீல்.

அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். மேலும் பொறுப்பேற்றுக் கொள்பவர்களில் அவனே சிறந்தவன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், புகாரி 4564

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

2

رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَإِلَيْكَ أَنَبْنَا وَإِلَيْكَ الْمَصِيرُ ﴿٤﴾

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلَّذِينَ كَفَرُوا وَاغْفِرْ لَنَا رَبَّنَا ۖ

إِنَّكَ أَنتَ الْعَزِيزُ الْحَكِيمُ ﴿٥﴾

ரப்பனா அலைக்க தவக்கல்னா வஇலைக்க அனப்னா வஇலைக்கல் மஸீ(ص)ர். ரப்பனா லா தஜ்அல்னா பி(ف)த்னதல்லில்லதீன கப(ف)ருவ் வஹ்(غ)பிர்லானா ரப்பனா இன்னக அன்தல் அஸீ(ز)ஸு(ز)ல் ஹகீம்.

எங்கள் இறைவா! உன்னையே முற்றிலும் சார்ந்திருக்கிறோம். நாங்கள் உன்னையே நோக்குகிறோம், மேலும், உன்னிடமே எங்கள் மீளுதலும் இருக்கிறது. எங்கள் இறைவா! காஃபிர்களுக்கு, எங்களைச் சோதனைப் பொருளாக ஆக்கிவிடாதே! எங்கள் இறைவா! எங்களுக்கு மன்னிப்பும் அருள்வாயாக! நிச்சயமாக நீ மிகைத்தவன்,ஞானம் மிக்கவன்.

அல்குர்ஆன் 60:4-5

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

3

رَبِّ هَبْ لِيْ مِنَ الصّٰلِحِيْنَ

ரப்பி ஹப்லீ மினஸ் ஸா(ص)லிஹீன்

என்னுடைய இறைவா! நீ எனக்கு ஸாலிஹான ஒரு நன்மகனைத் தந்தருள்வாயாக!

அல்குர்ஆன் 37:100

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

4-A

رَبِّ هَبْ لِيْ حُكْمًا وَّاَلْحِقْنِيْ بِالصّٰلِحِيْنَ ۙ ٨٣

وَاجْعَلْ لِّيْ لِسَانَ صِدْقٍ فِي الْاٰخِرِيْنَ ۙ ٨٤

وَاجْعَلْنِيْ مِنْ وَّرَثَةِ جَنَّةِ النَّعِيْمِ ۙ ٨٥

وَاغْفِرْ لِاَبِيْٓ اِنَّهٗ كَانَ مِنَ الضَّاۤلِّيْنَ ۙ ٨٦

وَلَا تُخْزِنِيْ يَوْمَ يُبْعَثُوْنَ ۙ ٨٧

ரப்பி ஹப்லீ ஹுக்மவ் வஅல்ஹிக்னீ பிஸ்ஸா(ص)லிஹீன்.

வஜ்அல்லீ லிஸான ஸி(ص)த்கின் பி(ف)ல் ஆஹி(خ)ரீன்.

வஜ்அல்னீ மிவ்வரஸ(ث)தி ஜன்ன(த்)தின் நயீம்.

வக்(غ)பி(ف)ர் லி அபீ, இன்னஹு கான மினத்த(ض)ல்லீன்.

வலா துஹ்(خ)ஸி(ز)னீ யவ்ம யுப்அஸூ(ث)ன்

அல்குர்ஆன் 26:83-87

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

4-B

இறைவனே! நீ எனக்கு ஞானத்தை அளிப்பாயாக. மேலும், ஸாலிஹானவர்களுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக! இன்னும், பின் வருபவர்களில் எனக்கு நீ நற்பெயரை ஏற்படுத்துவாயாக! இன்னும், பாக்கியம் நிறைந்த சுவனபதியின் வாரிசுக்காரர்களில் என்னை ஆக்கி வைப்பாயாக!

என் தந்தையாரையும் மன்னிப்பாயாக! நிச்சயமாக, அவர் வழி கெட்டவர்களில் (ஒருவராக) இருக்கிறார்.

இன்னும் (மனிதர்கள் உயிர் கொடுத்து) எழுப்பப்படும் நாளில் என்னை நீ இழிவுக்குள்ளாக்காதிருப்பாயாக!)

அல்குர்ஆன் 26:83-87

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

**5-A**

رَبِّ اجْعَلْ هٰذَا الْبَلَدَ اٰمِنًا وَّاجْنُبْنِیْ وَبَنِیَّ اَنْ نَّعْبُدَ الْاَصْنَامَ ؕ ﴿۳۵﴾

رَبِّ اِنَّهُنَّ اَضْلَلْنَ كَثِيْرًا مِّنَ النَّاسِ ۚ فَمَنْ تَبِعَنِیْ فَاِنَّهٗ مِنِّیْ ۚ
وَمَنْ عَصَانِیْ فَاِنَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۳۶﴾

رَبَّنَاۤ اِنِّیْۤ اَسْكَنْتُ مِنْ ذُرِّيَّتِیْ بِوَادٍ غَيْرِ ذِیْ زَرْعٍ عِنْدَ بَيْتِكَ الْمُحَرَّمِ ۙ
رَبَّنَا لِيُقِيْمُوا الصَّلٰوةَ فَاجْعَلْ اَفْـِٕدَةً مِّنَ النَّاسِ تَهْوِیْۤ اِلَيْهِمْ وَارْزُقْهُمْ
مِّنَ الثَّمَرٰتِ لَعَلَّهُمْ يَشْكُرُوْنَ ﴿۳۷﴾

رَبَّنَاۤ اِنَّكَ تَعْلَمُ مَا نُخْفِیْ وَمَا نُعْلِنُ ؕ وَمَا يَخْفٰی عَلَی اللّٰهِ مِنْ شَیْءٍ فِی
الْاَرْضِ وَلَا فِی السَّمَآءِ ﴿۳۸﴾ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِیْ وَهَبَ لِیْ عَلَی الْكِبَرِ اِسْمٰعِيْلَ
وَاِسْحٰقَ ؕ اِنَّ رَبِّیْ لَسَمِيْعُ الدُّعَآءِ ﴿۳۹﴾

رَبِّ اجْعَلْنِیْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِیْ ۖ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ ﴿۴۰﴾

رَبَّنَا اغْفِرْ لِیْ وَلِوَالِدَیَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ ﴿۴۱﴾

**அல்குர்ஆன் 14:35-41**

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

5-B

ரப்பிஜ்அல் ஹாதல் பலத ஆமினவ் வஜ்னுப்னீ வபனிய்ய அன்னஃபுதல் அஸ்(ص)னாம்

ரப்பி இன்னஹுன்ன அள்(ض)லல்ன கஸீ(ث)ரம் மினன்னாஸ் ப(ف)மன் தபிஅனீ ப(ف)இன்னஹு மின்னீ வமன் அஸா(ص)னீ ப(ف)இன்னக க(غ)பூ(ف)ருர் ரஹீம்

ரப்பனா இன்னீ அஸ்கன்து மின் துர்ரிய்ய(த்)தீ பிவாதின் கை(غ)ரி தீ ஸ(ز)ர்இன் இன்த பைத்திகல் முஹர்ரம். ரப்பனா லியுகீமுஸ் ஸ(ص)லாத்த ப(ف)ஜ்அல் அப்(ف)இத(த்)தம் மினன்னாஸி தஹ்வீ இலைஹிம், வர்ஸு(ز)க்ஹும் மினஸ்ஸ(ث)மராத்தி லஅல்லஹும் யஷ்குரூன்.

ரப்பனா இன்னக்க தஃலமு மானுஹ்(خ)பீ(ف) வமானுஃலின். வமா யஹ்(خ)பா(ف) அலல்லாஹி மின் ஷைஇன் பி(ف)ல் அர்ளி(ض) வலா பி(ف)ஸ்ஸமா

அல்ஹம்து லில்லாஹில்லதீ வஹபலீ அலல்கிபரி இஸ்மாயீல வஇஸ்ஹாக். இன்ன ரப்பீ லஸமீஉத் துஆ.

ரப்பிஜ்அல்னீ முகீமஸ் ஸ(ص)லாத்தி வமின் துர்ரியத்தி ரப்பனா வதகப்பல் துஆ ரப்பனக்(غ)பிர்லீ வலிவாலிதய்ய வலில் முஃமினீன யவ்ம யகூமுல் ஹிஸாப்

அல்குர்ஆன் 14:35-41

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

5-C

நினைவு கூறுங்கள்! "என் இறைவனே! இந்த ஊரை (மக்காவை சமாதானமுள்ளதாய்) அச்சம் தீர்ந்ததாய் ஆக்குவாயாக! என்னையும், என் மக்களையும் சிலைகளை நாங்கள் வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!" என்று இப்ராஹீம் கூறியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூறும்).

(என்) இறைவனே! நிச்சயமாக இவை (சிலைகள்) மக்களில் அநேகரை வழி கெடுத்து விட்டன, எனவே, எவர் என்னைப் பின்பற்றுகிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவராவார். எவர் எனக்கு மாறு செய்கிறாரோ (அவர் என்னைச் சார்ந்தவர் இல்லை, என்றாலும்) நிச்சயமாக நீ மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றாய்.

"எங்கள் இறைவனே! நிச்சயமாக நான் என் சந்ததியாரிலிருந்தும், சங்கையான உன் வீட்டின் (கஃபாவின்) அருகே, விவசாயமில்லாத (இப்)பள்ளத்தாக்கில், எங்கள் இறைவனே! - தொழுகையை அவர்கள் நிலைநாட்டுவதற்காக குடியேற்றியிருகின்றேன், எனவே மக்களில் ஒரு தொகையினரின் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்திடச் செய்வாயாக! இன்னும் அவர்கள் நன்றி செலுத்தும் பொருட்டு கனிவர்க்கங்களிலிருந்து அவர்களுக்கு நீ ஆகாரமும் அளிப்பாயாக!"

**அல்குர்ஆன் 14:35-41**

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

5-D

"எங்கள் இறைவனே! நாங்கள் மறைத்து வைத்திருப்பதையும், நாங்கள் பகிரங்கப்படுத்துவதையும், நிச்சயமாக நீ அறிகிறாய்! இன்னும் பூமியிலோ, வானத்திலோ உள்ள எந்த பொருளும் மறைந்ததாக இல்லை.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது, அவனே (என்னுடைய) முதுமையில் இஸ்மாயீலையும், இஸ்ஹாக்கையும் (புதல்வர்களாக) எனக்கு அளித்தான், நிச்சயமாக என் இறைவன் பிரார்த்தனையைக் கேட்பவன்.

"(என்) இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியிலுள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக!"

"எங்கள் இறைவா! என்னையும், என் பெற்றோர்களையும், முஃமின்களையும் கேள்வி கணக்குக் கேட்கும் (மறுமை) நாளில் மன்னிப்பாயாக" (என்று பிரார்த்தித்தார்).

அல்குர்ஆன் 14:35-41

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

6

رَبِّ اجْعَلْ هٰذَا بَلَدًا اٰمِنًا وَّارْزُقْ اَهْلَهٗ مِنَ الثَّمَرٰتِ
مَنْ اٰمَنَ مِنْهُمْ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ

ரப்பிஜ்அல் ஹாதா பலதன் ஆமினவ் வர்ஸு(ز)க் அஹ்லஹு மினஸ் ஸ(ث)மராதி மன் ஆமன மின்ஹும் பில்லாஹி வல்யயமில் ஆஹி(خ)ரி

“இறைவா! இந்தப் பட்டணத்தைப் பாதுகாப்பான இடமாக ஆக்கி வைப்பாயாக! இதில் வசிப்போரில் யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறார்களோ அவர்களுக்குப் பல வகைக் கனிவர்க்கங்களையும் கொண்டு உணவளிப்பாயாக”.

அல்குர்ஆன் 2:126

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

7

رَبَّنَا تَقَبَّلۡ مِنَّا ؕ اِنَّكَ اَنۡتَ السَّمِيۡعُ الۡعَلِيۡمُ

ரப்பனா தகப்பல் மின்னா இன்னக
அன்தஸ் ஸமீஉல் அலீம்

எங்கள் இறைவனே! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே (யாவற்றையும்) கேட்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றாய்.

அல்குர்ஆன் 2:127

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

8-A

رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَمِنْ ذُرِّيَّتِنَآ
أُمَّةً مُّسْلِمَةً لَّكَ ۖ وَأَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ
عَلَيْنَا ۖ إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ ﴿١٢٨﴾

رَبَّنَا وَابْعَثْ فِيهِمْ رَسُولًا مِّنْهُمْ يَتْلُوا
عَلَيْهِمْ ءَايَٰتِكَ وَيُعَلِّمُهُمُ الْكِتَٰبَ وَالْحِكْمَةَ
وَيُزَكِّيهِمْ ۚ إِنَّكَ أَنْتَ الْعَزِيزُ الْحَكِيمُ ﴿١٢٩﴾

அல்குர்ஆன் 2:128,129

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

8-B

ரப்பனா வஜ்அல்னா முஸ்லிமைனி லக, வமின் துர்ரிய்ய(த்)தினா உம்ம(த்)தம் முஸ்லிம(த்)தல் லக, வரினா மனாஸிகனா, வதுப் அலைனா, இன்னக அன்தத்தவ்வாபுர் ரஹீம்.

ரப்பனா வப்அஸ்(ث) பீ(ف)ஹிம் ரஸூலம்மின்ஹும் யத்லூ அலைஹிம் ஆயாத்திக, வயுஅல்லிமுஹுமுல் கிதாப வல்ஹிக்மத வயுஸ(ز)க்கீஹிம். இன்னக அன்தல் அஸீ(ز)ஸு(ز)ல் ஹகீம்.

அல்குர்ஆன் 2:128,129

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

8-C

“எங்கள் இறைவனே! எங்கள் இருவரையும் உன்னை முற்றிலும் வழிபடும் முஸ்லிம்களாக ஆக்குவாயாக! எங்கள் சந்ததியினரிடமிருந்தும் உன்னை முற்றிலும் வழிபடும் ஒரு கூட்டத்தினரை (முஸ்லிம் சமுதாயத்தை) ஆக்கி வைப்பாயாக! நாங்கள் உன்னை வழிபடும் வழிகளையும் அறிவித்து அருள்வாயாக! எங்களை(க் கருணையுடன் நோக்கி எங்கள் பிழைகளை) மன்னிப்பாயாக! நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்.”

“எங்கள் இறைவனே! அவர்களிடையே உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே எழுந்திடச் செய்வாயாக - நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனுமாகவும், பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றாய்.”

அல்குர்ஆன் 2:128,129

# இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

9

இப்ராஹீம்(அலை) மற்றும் முஹம்மது(ﷺ) அவர்கள் இருவரும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு ஓதிய துஆ

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ، مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ، وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ

அஊது பிகலிமா(த்)தில்லாஹித் தாம்ம(த்)தி, மின் குல்லி ஷைத்தா(ط)னின் வஹாம்ம(த்)தின், வமின் குல்லி ஐனின் லாம்ம(த்)தின்

அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் நச்சுப் பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், புகாரி 3371